இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

1474 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

பதவிகள் - வெற்றிடம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும் மேற்படி வர்த்தமானியில் பார்க்கவும்

திருத்தம்

பொலிஸ் திணைக்களத்திற்கு (விசேட அதிரடிப்படை) உப பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் கொஸ்தாப்பல் மற்றும் பொலிஸ் கொஸ்தாப்பல் சாரதி ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்த்தல்

மேற்போந்த பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் தொடர்பாக 2006.10.27 ஆந் திகதியும் 1469 என்ற இலக்கமும் கொண்ட அரச வர்த்தமானியின் அறிவித்தல் தொடர்பானது-

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2006.12.11 வரையிலும் நீடிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

பொலிஸ் மா அதிபர்.

12-344

பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திருத்தம்

பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு

தேசிய மாணவ வீரர் படையணி

உள்ளூர் சபையின் கீழுள்ள கிராமப் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்களாக நியமிப்பதற்கும் தேசிய மாணவ வீரர் படையணியின்கீழ் பயிலுனர் உத்தியோகத்தர்களாக அதிகாரவாணைக்கு நியமிப்பதற்கும் தகுதியுடையோரைத் தேர்ந்தெடுக்கும் போட்டிப் பரீட்சை-2006

2006.10.27 ஆந் திகதிய இலக்கம் 1469 அரச வர்த்தமானப் பத்திரிகையில் வெளியான மேற்குறிப்பிட்ட வர்த்தமானப் பத்திரிகை அறிவிப்பில் பின்வரும் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன என்பதனை அறியத்தருகின்றோம்.

(1) **பகுதி 2 பிரிவு 2.4 :**
2006.12.31 ஆந் திகதிக்கு வயது 18 இற்கு மேற்பட்டும் 25 க்கு குறைவாகவும் இருத்தல் வேண்டும்.

(2) **பகுதி 5 பிரிவு 5.1 :**
2006.04.25 ஆந் திகதி அரச நிர்வாக சுற்றறிக்கை 06/2006 இன் பிரகாரம் சம்பளப் பரிமாணம் கீழ்க்காணப்படும் விதத்திலாகும் :-
(ரூபா 12,920X12)-10X120-5X150-(ரூபா 14,870X12)

(3) **பகுதி 5 பிரிவு 5.2 :**
சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரர்கள் தேசிய மாணவ வீரர் படையணியின் பயிற்சி மத்திய நிலையங்களில் இரண்டு வருடப் பயிற்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(4) **பகுதி 6 பிரிவு 6.1 :**
விண்ணப்பங்கள் 2006.12.07 ஆந் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் மாத்திரம், "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், அமைப்புக்கள் மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் இவ்வறிவித்தலின் முடிவிலுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி தயாரித்தல் வேண்டும்.

பணிப்பாளர்,
தேசிய மாணவ வீரர் படையணி.

தேசிய மாணவ வீரர் படையணி,
இலக்கம் 15, துட்டுகெமுனு வீதி,
பாமன்கடை,
தெஹிவளை.
12-201

பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

அவுஸ்திரேலியா, விக்டோரியா மாநில மவுண்ட்வாணலீ, ஸ்டீபன்சன்ஸ் வீதி, இல. 177 ஐச் சேர்ந்த சந்திரசிரி கணேகாட ஆகிய என்னால் இலங்கையரசுக்கும் பொது மக்களுக்கும் அறிவித்துக்கொள்வதாவது களனி, பிலப்பிட்டி, பியகம வீதி, இல. 55, கமலா ஜினாதரி ஜயசிங்க வி/மு கணேகொட என்பவருக்கு அவுஸ்திரேலியா விக்டோரியா சொலிசிட்டர் ஜீவகாந்தி பாலச்சந்திரன் அவர்களால் 1999.08.12 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட அட்டர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாயும் 2006, ஒற்றோபர் 16 ஆந் திகதியிலிருந்து அவரால் மேற்கொள்ளப்படும் எந்தச் செயலுக்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதாகும்.

சந்திரசிரி கணேகொட.

12-23

அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

தெஹிவலை, பார்க் டெரஸில் உள்ள இல. 3 இல் வசிக்கும் தானாபதி லியனகே டிஷாந்த பிரியதர்ஷன ஆகிய நான், மேற்கூறிய தெஹிவலை, பார்க் டெரஸில் உள்ள இல. 3 இல் வசிக்கும் கம்லத் ஆச்சிகே டெக்சிமா பஸந்திற்கு வழங்கப்பட்ட பிரசித்திபெற்ற நொத்தாரிசு ஆர். எஸ். குணசேகரவினால் 2005.07.15 ஆந் திகதி அத்தாட்சி செய்த இலக்கம் 96 கொண்ட அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்வதுடன் அந்த அற்றோணி தத்துவம் செல்லுபடியாகாது என்பதை இலங்கைச் சனாநாயக சோசலிசக் குடியரசு அரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

தானாபதி லியனகே டிஷாந்த பிரியதர்ஷன

12-24

அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் இரத்தினபுரி மாவட்டத்தில் கலக பெலிகூறாகப் ஓயா வசிக்கும் கனேவத்தசோ தொன் நிமல்சூரிய ஆகிய நான் இலங்கைக் குடியரசிலுள்ள அனைவருக்கும் அறிவிப்பதாவது பெலிஹால் ஓய கலகம் தொன் நிமலசூரிய ஆகிய என்னால் "திமுது வைன் ஸ்டோர்ஸ்" என்ற பெயரால் நிருவாகிக்கப்பட்ட வெளிநாட்டு குடிவகை வியாபார ஸ்தாபனம் என்னால் நிருவகிப்பதற்காக பலாங்கொடை பிரசித்த நொத்தாரிசும் சட்டத்தரணியுமான டி. எம். சந்திரசேகர அவர்களால் 2003.02.02 ஆந் திகதி உருவாக்கப்பட்ட 4498 இலக்கம் கொண்ட அட்டோர்ணித் அனுமதிப்பத்திரத்தில் எனது உறவினரான பெலிஹால் ஓய கலகம, விறித்முகவரியில் உள்ள கனேவத்தகே தொன் அதுல குமாரசிரி சோமபால ஆகியோரால் முன்வைக்கப்பட்ட அட்டோர்ணி அனுமதிப்பத்திரத்தை செல்லுபடியற்றதாகச் செய்வதாக 1978 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க பிரிவின்படி மாற்றப்பட்ட 1902 ஆம் ஆண்டின் 4 ஆம் பிரிவின் படி இத்தால் அறிவிக்கப்படுவதுடன் இதன் பின்னர் மேற்குறிப்பிடப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் எந்தவித செல்லுபடியாகும் தன்மையோ அல்லது அதிகாரம் இல்லையென்பதை மேற்குறிப்பிட்ட கணேவத்தகே தொன் அதுல குமாரசிரி சோமபால அவர்களால் மேற்குறிப்பிடப்பட்ட வெளியார் குடிவகை வியாபாரம் சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் எந்தவித செயற்பாடுகள் தொடர்பாக இதன்பின்னர் என்னால் பொறுப்பேற்க முடியாது என்பதை எல்லோரும் அறிந்து கொள்வீர்களாக.

கனேவத்ததே தொன் நிமலசூரிய,

12-179

அட்டோரணி தத்துவப்பத்திரம் இரத்துச் செய்தல்

இலக்கம் 36, பலகல வீதி, ஹெதலையைச் சேர்ந்த மல்லவ ஆரச்சிகே கர்ட் ரூட் கிஷாந்தி பெரேரா ஆகிய நான் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, அரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருவது, 824 ஆம் இலக்க 2005.05.10 ஆந் திகதி பிரசித்த நொத்தாரிசு எம். கிங்ஸ்லி பெரேரா என்பவரால் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட அட்டோர்னித்தத்துவப்பத்திரம் மூலமாக என்னால் என் சார்பாக இலங்கையில் செயற்படுவதற்காக இலக்கம் 36, பலகல வீதி, ஹெதலையைச் சேர்ந்த தாம்பகேத மேரி ஜோசபின் பெரேரா என்பவரை எனது முறையானதும் சட்டரீதியானதுமான அட்டோர்ணி தத்துவக்காரராக நியமிக்கப்பட்டிருந்தார். அவ்வாறு வழங்கப்பட்டிருந்த தத்துவப்பத்திர அதிகாரத்தை இத்தால் முடிவுக்குக் கொண்டுவருவதுடன் அதன் மூலம் வழங்கப்பட்டிருந்த அதிகாரத் தையும் இரத்துச் செய்து இல்லாது அழித்து அவ்விசேட அட்டோர்னித் தத்துவப்பத்திரம் மூலம் செய்யப்படுகின்ற எச்செயற்பாட்டுக்கும் இதன்பிற்பாடு எவ்வித சட்டவலுவோ சட்ட அங்கீகாரமோ கிடையாது எனவும் அதற்கு தான் எவ்வித பொறுப்பற்றவர் எனவும் அறியத் தருகின்றேன்.

மல்லவ ஆரச்சிகே கர்ட் ரூட்,
கிஷாந்தி பெரேரா.

2006.11.08.
12-181

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, திசெம்பர் 08 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, நவெம்பர் 24 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

லக்ஷ்மன் குணவர்தன,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 06 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அழுத்தகரினால் பிரசுரிக்கப்பட்டது.

ஏல விற்பனைகள்

றுஹுணு அபிவிருத்தி வங்கி - வெலிகம கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்

சொத்துக்கள் ஏலவிற்பனை

றுஹுணு அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி கீழ் குறிப்பிட்ட சொத்துக்கள் 2006.12.20 ஆந் திகதி மு. ப. 10.30 க்கு சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம் இல. 5466 எனும் ஈட்டுப்பத்திரத்தின் கீழ்

1. தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில், வெலிகம கோறளையில் பெனேடியனயில் அமைந்துள்ள கொரோக்கஹவில ஹேன பி. பி. 10741 இல் குறிப்பிட்டபடி இல. 1, 2, 3, 4, 5, 6 எனும் காணியை பிரித்து வேறாக்கப்பட்ட இல. 1ஏ எனும் ஒரு ஏக்கர் ஒரு றூட் பதினாறு தசம் ஐந்து பேர்ச்சஸ் (1ஏ. 1றூ. 16.5பே.) எனும் மிகப்பெரிய காணியின் அனைத்து பயிர்ச்செய்கை, பழவர்க்கங்கள் போன்றன அடங்கலாக.

2. மேலே குறிப்பிட்ட கொரோக்கஹவிலஹேன பி. பி. 10741 குறிப்பிட்ட இல. 1, 2, 3, 4, 5, 6, 7 எனும் காணியை பிரித்து வேறாக்கப்பட்ட இல. 2 எனும் ஒரு ஏக்கர் இருபத்தொரு பேர்ச்சஸ் (1ஏ. 0றூ. 21பே.) எனும் மிகப்பெரிய காணியும் அதிலுள்ள அனைத்தும் அடங்கலாக.

3. மேலே குறிப்பிட்ட பெனேடியனயில் அமைந்துள்ள கொரோக்கஹவிலஹேன பி. பி. 10741 குறிப்பிட்ட இல. 1, 2, 3, 4, 5, 6, 7 எனும் காணியை பிரித்து வேறாக்கப்பட்ட இல. 4 எனும் ஒரு ஏக்கர் இரண்டு றூட் முப்பத்தி ஏழு பேர்ச்சஸ் (1ஏ. 2றூ. 37பே.) எனும் மிகப்பெரிய காணியும் அதிலுள்ள அனைத்தும் அடங்கலாக.

4. மேலே குறிப்பிட்ட பெனேடியனயில் அமைந்துள்ள கொரோக்கஹவிலஹேன பி. பி. 10741 குறிப்பிட்ட இல. 1, 2, 3, 4, 5, 6. 7 எனும் காணியை பிரித்து வேறாக்கப்பட்ட இல. 6 எனும் ஒரு ஏக்கர் மூன்று றூட் இருபத்திநாலு பேர்ச்சஸ் (1ஏ. 3றூ. 24பே.) எனும் மிகப்பெரிய காணியின் அனைத்து பயிர்ச்செய்கையும் பழவர்க்கங்களும் அடங்கலாக.

ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் இல. 5486 எனும் ஈட்டுப்பத்திரத்தின் கீழ்

மேலே குறிப்பிட்ட பெனேடியனயில் அமைந்துள்ள பி. பி. 10741 என்ற வரைபடத்தில் குறிப்பிட்டபடி இல. 8 எனும் கொரோக்கஹவிலஹேன எனும் காணியை மீண்டும் பிரித்து வேறாக்கப்பட்ட இல. 4428 பிரகாரம் ஒரு ஏக்கர் மூன்று றூட் முப்பத்தி ஏழு பேர்ச்சஸ் (1ஏ. 3றூ. 37பே.) எனும் மிகப்பெரிய காணியின் அனைத்தும் அடங்கலாக.

ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் இல. 8392 எனும் ஈட்டுப்பத்திரத்தின் கீழ்

1. கொரோக்கஹவில ஹேன பி. பி. 10741 குறிப்பிட்டபடி இல. 1, 2, 3, 4, 5, 6, 7 எனும் காணியை பிரித்து வேறாக்கப்பட்ட இல. 1ஏ எனும் ஒரு ஏக்கர் ஒரு றூட் பதினாறு தசம் ஐந்து பேர்ச்சஸ் (1ஏ. 1றூ. 16.5பே.) எனும் மிகப்பெரிய காணியின் அனைத்தும் அடங்கலாக.

2. மேலே குறிப்பிட்ட பெனேடியனவில் அமைந்துள்ள கொரோக்கஹவிலஹேன பி. பி. 10741 குறிப்பிட்ட இல. 1, 2, 3, 4, 5, 6, 7 எனும் காணியை பிரித்து வேறாக்கப்பட்ட இல. 2 எனும் ஒரு ஏக்கர் இருபத்தொரு பேர்ச்சஸ் (1ஏ. 0றூ. 21பே.) எனும் காணியை பிரித்து அமைந்துள்ள அனைத்தும் அடங்கலாக.

3. மேலே குறிப்பிட்ட பெனேடியனயில் அமைந்துள்ள கொரோக்கஹவிலஹேன பி. பி. 10741 குறிப்பிட்ட இல. 1, 2, 3, 4, 5, 6, 7 எனும் காணியை பிரித்து வேறாக்கப்பட்ட இல. 4 எனும் ஒரு ஏக்கர் இரண்டு றூட் முப்பத்தி ஏழு பேர்ச்சஸ் (1ஏ. 2றூ. 37பே.) எனும் மிகப்பெரிய காணியும் அதிலுள்ள அனைத்தும் அடங்கலாக.

4. மேலே குறிப்பிட்ட பெனேடியனயில் அமைந்துள்ள கொரோக்கஹவிலஹேனயில் அமைந்துள்ள பி. பி. 10741 குறிப்பிட்ட இல. 1, 2, 3, 4, 5, 6. 7 எனும் காணியை பிரித்து வேறாக்கப்பட்ட இல. 6 எனும் ஒரு ஏக்கர் மூன்று றூட் இருபத்திநாலு பேர்ச்சஸ் (1ஏ. 3றூ. 24பே.) எனும் மிகப்பெரிய காணியின் அனைத்தும் அடங்கலாக.

5. மேலே குறிப்பிட்ட பெனேடியனயில் அமைந்துள்ள பி. பி. 10741 என்ற வரைபடத்தின் இல. 8 எனும் கொரோக்கஹவிலஹேன எனும் காணியை மீண்டும் பிரித்து வேறாக்கப்பட்ட இல. 4428 பிரகாரம் ஒரு ஏக்கர் மூன்று றூட் முப்பத்தி ஏழு பேர்ச்சஸ் (1ஏ. 3றூ. 37பே.) எனும் மிகப்பெரிய காணியின் அனைத்து அடங்கலாக.

மேலதிக விபரங்களுக்கு.- 2006.06.02 ஆந் திகதியின் அரச வர்த்தமானப் பத்திரிகையிலும் 2006.05.25 ஆந் திகதியின் "தினமின", "தினகரன்" மற்றும் "த ஐலண்ட்" ஆகிய தினசரி பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட தீர்மான அறிவித்தலைக் கவனிக்க.

சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.- வெலிகம பெனேடியன வழியாக பெனேடியன கனிஷ்ட வித்தியாலயத்தின் அருகே இடப்பக்கமாக விழும் சத்தாதிஸ்ஸ மாவத்தையில் 1/2 கி. மீற்றர் செல்ல வலப்பக்கமாக இது அமைந்திருக்கும்.

கொடுப்பனவு செலுத்தும் முறை.-ஏலவிற்பனை தீர்ந்துவிட்டதும் கொள்வனவாளர் கீழ் கண்டபடி பணமாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூர் அதிகாரியின் வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு விற்பனை விலையின் 1%;
(3) ஏலவிற்பனையாளர் தரகு என விற்பனை விலையின் 2 1/2% ;
(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூ. 500 ;
(5) விற்பனை செலவும் இதர செலவுகள் இருப்பின் அவையும்,

கொள்வனவு விலையில் மீதி 90% க்கான பணத்தை விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "பம்புரண, றுஹுணு அபிவிருத்தி வங்கி, பொது முகாமையாளர்" இற்கு செலுத்த வேண்டும். மேற்படி 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறின் குறிப்பிட்ட பணத்தை செலுத்தாது விடவும் மீண்டும் அச்சொத்துக்கள் விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமையுண்டு. மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி இல. : 041-2231532, 2236208, 2236209.

ஜீ. பீ. ஆனந்த,
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை,
தொலைபேசி இலக்கம் : 041-2228731
12-19

மக்கள் வங்கி - களனி கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

பெறுமதிமிக்க குடியிருப்பு ஆதனம் (பேலியாகொடை, நீகிரோதாராம வீதி, இல. 61 இல் அமைந்துள்ளது) ஏல விற்பனை

[காணி விஸ்தீரணம் : பதினைந்து தசம் ஏழு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 15.7பே.)]

ஆதனத்திற்குச் செல்லும் வழி.- பேலியாகொடை பொலிசுக்கு முன்னாலுள்ள சிசிர மர ஆலைக்கு அருகிலுள்ள நீக்ரோதாராம வீதியில் ஏறக்குறைய 75 மீட்டர் செல்ல வீதிக்கு இடப்புறத்தில் இவ் ஆதனம் அமைந்துள்ளது.

மக்கள் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2006.12.20 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

தீர்மான அறிவித்தலுக்கு.-1998.09.18 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 1998.08.31 ஆந் திகதிய "தினமின", "டெய்லி நியூஸ்" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

கொடுப்பனவு செய்யும் விதம்.-வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒருவீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(5) விற்பனை செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (எவையேனுமிருப்பின்) ;
(6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "முதுன்கொட, பெலும் மஹர, கண்டி வீதி, இல. 131, மக்கள் வங்கி, மேற்கு வலயம் III, அலுவலகம், உதவிப் பொது முகாமையாளர்," இடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. 033-2222325, 033-2225008, 033-2226741, தொலைநகல் இல. : 033-2226165.

உரித்து உறுதிகளையும் வேறேதேனும் குறிப்புக்களையும் மேற்கூறப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்துவீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

ஈ. எஸ். ராமநாயக்க,
(தீவு முழுவதுக்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்
மற்றும் உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல. 11/55, குடாபுத்கமுவ,
அங்கொடை,
தொலைபேசி இல. : 2419126.
12-159

மக்கள் வங்கி - களனி கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

பெறுமதிமிக்க குடியிருப்பு ஆதனம் (களனி, ஈரியவெட்டியவில் அமைந்துள்ளது) வர்த்தகக் கட்டிடத்துடன் சேர்த்து ஏல விற்பனை

[காணி விஸ்தீரணம் ஒரு றூட் ஒன்று தசம் ஏழு ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 1.75பே.)]

ஆதனத்திற்குச் செல்லும் வழி.- கொழும்பிலிருந்து கொழும்பு - கண்டி வீதி வழியே செல்ல கிரிபத்கொடை நகரின் இடப்பக்கத்தில் உள்ள ஈரியவெட்டிய வீதியில் ஏறக்குறைய 400 மீட்டர் சென்றதன் பின்னர். இவ்வாதனம் வீதிக்கு இடப்பக்கத்தில் அமைந்துள்ளது.

மக்கள் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2006.12.27 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

தீர்மான அறிவித்தலுக்கு.-1998.03.27 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 1998.03.09 ஆந் திகதிய "தினமின", "டெய்லி நியூஸ்" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

கொடுப்பனவு செய்யும் விதம்.-வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒருவீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்);
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(5) விற்பனை செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (எவையேனுமிருப்பின்) ;
(6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "முதுன்கொட, பெலும் மஹர, கண்டி வீதி, இல. 131, மக்கள் வங்கி, மேற்கு வலயம் III, அலுவலகம், உதவிப் பொது முகாமையாளர்" இடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. 033-2222326, 033-2225008, 033-2226741, தொலைநகல் இல. : 033-2226165.

உரித்து உறுதிகளையும் வேறேதேனும் குறிப்புக்களையும் மேற்கூறப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்துவீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

ஈ. எஸ். ராமநாயக்க,
(தீவு முழுவதுக்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்
மற்றும் உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல. 11/55, குடாபுத்கமுவ,
அங்கொடை,
தொலைபேசி இல. : 011-2419126.
12-160

பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷன் லிமிட்டெட்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளின் கடன் மீட்புச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை

இரு பெறுமதியான சொத்துக்களுக்கான ஏலவிற்பனை

(செய்யது மொஹமது நசீர் என்பவரால் இக்காணி பேன் ஏசியா பேங்கிங் கோர்ப்பரேஷன் லிமிட்டெட்டில் (முன்பு பேன் ஏசியா வங்கி லிமிட்டெட்) அடகு செய்யப்பட்டது.)

விற்பனை 01 :

வடமேல் மாகாணம், குருநாகலை மாவட்டத்தில் மஹாகல்பொட மேபொட கோரளையைச் சேர்ந்த வேயுத வில்லி ஹல்பத்துவில் உள்ள மெஹியெல்ல கிராமத்தில் அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் எம். டபிள்யூ. ஆரியரத்ன என்பவரால் 1997.03.15 ஆந் திகதியன்று தயாரிக்கப்பட்ட திட்ட இலக்கம் 827 கொண்ட தற்போது "வத்தை" என அழைக்கப்படும் பரன்டட் காணித்துண்டின் பிரிவு 01, அங்குள்ள யாவும் உட்பட

விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 28பே.

ஆதனத்தை அடையும் வழி.- குருநாகலை நகரத்திலிருந்து 2.5 கி. மீ. தெலியாகொன்னவில் இடதுபுறமாய் ஹிஜ்ரா மாவத்தைக்குத் திரும்பி 400 மீட்டர் தொலைவில் வலதுபுறத்தில் இக்காணி உண்டு.

குருநாகல் பொது நொத்தாரிசு எல்ஸி ஷாந்தா ரேக்காவ என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 2000, திசெம்பர் 14 ஆந் திகதியும் 9340 ஆம் இலக்கமும் கொண்ட பிணை உறுதியின் கீழ் கட்டணம் செலுத்தப்படவில்லை.

வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா பேங்கிங் கோப்பரேஷனால் எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் நாங்கள் 2006, திசெம்பர் 21 ஆந் திகதி வியாழக்கிழமை மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில விற்பனை செய்வோம்.

விற்பனை 02 :

வடமேல் மாகாணம், குருநாகலை மாவட்டத்தில் மஹாகல்பொட மேபொட கோரளையைச் சேர்ந்த வேயுத வில்லி ஹத்பத்துவில் உள்ள ஹதிரவலன கிராமத்தில் அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. சி. எஸ். எம். அபேசேகர என்பவரால் 1986.03.15 ஆந் திகதியன்று தயாரிக்கப்பட்ட திட்ட இலக்கம் 54A/86 கொண்ட "மக்குல்கொட்டுவ" என அழைக்கப்படும் காணித்துண்டுப் பிரிவுகள் 22, 23 ஆகியன அங்குள்ள யாவும் உட்பட

விஸ்தீரணம் : 5ஏ. 0றூ. 37.5பே.

அதே நாளில் அதே இடத்தில் மு. ப. 11.30 மணிக்கு இரண்டாம் ஏலவிற்பனை ஆரம்பமாகும்.

கட்டணம் செலுத்தும் விதம்.- வெற்றிகரமான கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்களை பணமாக அவ்விடத்திலேயே செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தப்பட விற்பனை வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணமான கொள்வனவுத் தொகையில் 2 1/2% (இரண்டரை வீதம் மட்டும்) ;
(4) ரூ. 75,000 க்கு மேற்படாத மொத்த விளம்பரச் செலவுகளின் 50% ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூ. 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்துவதற்கான நொத்தாரிச கட்டணம் ரூ. 2000.

கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்.

தீர்மான அறிவித்தலுக்கு.- தயவு செய்து 2006, நவெம்பர் 24 ஆந் திகதி "சிலோன் டெய்லி நியூஸ்", "லக்பிம" மற்றும் "சுடர்ஒளி" புதினப் பத்திரிகைகளையும் அரசாங்க வர்த்தமானியையும் பார்க்கவும்.

மேலதிக விபரங்கள்.- உறுதி மற்றும் ஏனைய ஆவணங்களை கொழும்பு 3, காலி வீதி, 450, பேன் ஏசியா பேங்கிங் கோர்ப்பறேசன், முகாமையாளர் - சட்டம் இடமிருந்து பார்வையிட்டு பெற்றுக்கொள்ளவும். தொலைபேசி இல. : 2565573, 2565565.

சொக்மன் மற்றும் சமரவிக்ரம,
கீர்த்தி வாய்ந்த முன்னணி பட்டய ஏலதாரர்கள்
இலங்கையிலுள்ள அரச மற்றும் தனியார்துறை
வங்கிகளுக்கான மதிப்பீட்டாளர்கள்.

தலைமை அலுவலகம்	*நகர அலுவலகம்*
24, டொரிங்டன் வீதி,	290, ஹவ்லொக் ரோட்,
கண்டி,	கொழும்பு 5,
தொலைபேசி 081-2227593	தொலைபேசி : 2502680, 2585408
தொலைநகல் : 081-2224371	தொலைநகல் : 011-2588176
	ஈ-மெயில்: samera@ sri.lanka.net

12-199

மக்கள் வங்கி - மல்வான கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

பெறுமதிமிக்க குடியிருப்பு ஆதனம் (மல்வானை வெல்கமவில் அமைந்துள்ளது) ஏல விற்பனை

[காணி விஸ்தீரணம் : 20 பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 20பே.)]

ஆதனத்திற்குச் செல்லும் வழி.- பியகம சந்தியிலிருந்து கொழும்பு-தெக்கடனை வீதி வழியே ஏறக்குறைய 3 கி. மீ. சென்றதும் மல்வானை நகரை எதிர்கொள்வீர்கள். அங்கிருந்து தொம்பே வீதியில் ஏறக்குறைய 250 மீற்றர் முன்னோக்கி செல்ல, இடப்பக்கத்தில் அமைந்துள்ள சஹீட் ஹாஜியார் மாவத்தை வழி ஏறக்குறைய 150 மீற்றர் சென்றதும் வரும் வலப்பக்கத்திலுள்ள வீதி வழியே ஏறக்குறைய 50மீ. செல்ல வலப்பக்கத்தில் தேவாலயத்திற்கு முன்னால் இவ் ஆதனம் அமைந்துள்ளது.

மக்கள் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2006.12.12 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

தீர்மான அறிவித்தலுக்கு.-2003.04.04 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும 2005.05.12 ஆந் திகதிய "தினமின", "டெய்லி நியூஸ்" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

கொடுப்பனவு செய்யும் விதம்.-வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் விற்பனை வரி 1% (ஒருவீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(5) விற்பனை செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (எவை யேனுமிருப்பின்) ;
(6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "முதுன்கொட, பெலும்மஹர, கண்டி வீதி, இல. 131, மக்கள் வங்கி, மேற்கு வலயம் III, அலுவலகம், உதவிப் பொது முகாமையாளர்," இடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. 033-2222325, 033-2226741, தொலைநகல் இல. : 033-2226165.

உரித்து உறுதிகளையும் வேறேதேனும் குறிப்புக்களையும் மேற்கூறப்பட்ட முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்துவீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

ஈ. எஸ். ராமநாயக்க,
(தீவு முழுவதுக்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்
மற்றும் உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல. 11/55, குடாபுத்கமுவ,
அங்கொடை,
தொலைபேசி இல. : 2419126.
12-203

பகுதி I : தொகுதி (I) - பொது

சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2006 இன் இல. 333

தேசிய மாணவ வீரர் படையணி

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வுகள்

2002, செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினட் கர்னல் ஆக :
மேஜர் கே. எஸ். பெரேரா

அதியுத்தமனாரின் ஆணைப்படி,
கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006.11.03.
12-147

அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

2006 இன் இல. 334

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது : இலங்கை நிருவாக சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த, திரு. தொன் சோமவீர எதிரிசிங்க அவர்கள் உடனடியாக நடைமுறைக்கு வருமாறு மறு கட்டளை பிறப்பிக்கும் வரை தொழில் ஆணையாளர் நாயகமாக.
12-31

2006 இன் இல. 335

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது : திரு. திஸ்ஸ மகாநாம ஹேரத் அவர்கள் உடனடியாக நடைமுறைக்கு வருமாறு மறு கட்டளை பிறப்பிக்கும் வரை இரண்டாம் நிலை அடிப்படையில் மின்வலு, சக்தி அமைச்சின் மேலதிக செயலாளராக.
12-32

2006 இன் இல. 336

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது : இலங்கை நிருவாக சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த, திரு. சாம் எதிரிசூரிய அவர்கள் 2006, சனவரி மாதம் 04 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு மறுகட்டளை பிறப்பிக்கும் வரை வர்த்தக, வாணிப நுகர்வோர் அலுவல்கள், விற்பனை அபிவிருத்தி அமைச்சின் மேலதிகச் செயலாளராக.
12-34/ 1

2006 இன் இல. 337

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது : இலங்கை நிருவாக சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த, திரு. ரீ. அஷோக்க பீரிஸ் அவர்கள் 2006, சனவரி மாதம் 16 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு மறுகட்டளை பிறப்பிக்கும் வரை வர்த்தக, வாணிப, நுகர்வோர் அலுவல்கள், விற்பனை அபிவிருத்தி அமைச்சின் மேலதிகச் செயலாளராக.
12-34/ 2

2006 இன் இல. 338

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது : இலங்கை நிருவாக சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த, திருமதி பி. சிறிவர்தன அவர்கள் 2006, மாச்சு மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு மறுகட்டளை பிறப்பிக்கும்வரை தாபனப் பணிப்பாளர் நாயகமாக.
12-33/ 1

2006 இன் இல. 339

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது : இலங்கையில் நிருவாக சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த, திரு. ஏ. நோபட் அவர்கள் 2006, மாச்சு மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு மறுகட்டளை பிறப்பிக்கும் வரை இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகமாக.
12-33/ 2

2006 இன் இல. 340

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது : இலங்கை நிருவாக சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த, திருமதி எஸ். கே. வீரதுங்க அவர்கள் 2006, மாச்சு மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு மறுகட்டளை பிறப்பிக்கும் வரை பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் (உள்நாட்டலுவல்கள்) ஆக.
12-33/ 3

2006 இன் இல. 341

அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது : இலங்கை நிருவாக சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த, திரு. எச். உடகந்தகே அவர்கள் 2006, மாச்சு மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு மறுகட்டளை பிறப்பிக்கும் வரை பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் (பொது நிருவாகம்) ஆக.
12-33/ 4

மற்றைய நியமனங்களும் பிறவும்

2006 இன் இல. 342

இலங்கை நிர்வாக சேவையின் பதவி நியமனம்

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த திருமதி எச். எம். எஸ். ஜயதுங்க அவர்கள் மறு கட்டளை பிறப்பிக்கும் வரை 2006.01.16 ஆந் திகதி முதல் பிரதம அமைச்சரின் அலுவலகத்தின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த திருமதி டப். எம். எம். ஆர். அதிகாரி அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.01.19 ஆந் திகதியில் இருந்து சமுர்த்தி வறுமை ஒழிப்பு அமைச்சில் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த திருமதி ஏ. எச். ஐ. சமரவீர அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.01.20 ஆந் திகதியில் இருந்து இலங்கை புகையிரத திணைக்களத்தில் மேலதிக புகையிரத முகாமையாளர் (நிருவாகம்) பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த திரு. ஜே. ஜே. ரட்னசிறி அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.01.31 ஆந் திகதியில் இருந்து மின்வலு சக்தி அமைச்சின் பணிப்பாளர் (மின்வலு) பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த திரு. கே. பீ. பீ. வீ. டி. சில்வா அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.02.03 ஆந் திகதியில் இருந்து சமுர்த்தி வறுமை ஒழிப்பு அமைச்சில் பணிப்பாளர் (மின்வலு) பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த திரு. எல். டி. சீ. மஹானாம அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.03.01 ஆந் திகதியில் இருந்து கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த திரு. எம். டீ. நெவில் பத்மசிறி அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.04.07 ஆந் திகதியில் இருந்து சமுர்த்தி வறுமை ஒழிப்பு அமைச்சில் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த திரு. ஜே. ஏ. சரத் ரவீந்திர அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.06.26 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படும் வண்ணம், மறு அறிவித்தல் வரை இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகள் புலனாய்வு ஆணைக்குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு II தரம் I ஐச் சேர்ந்த திரு. ஏ. எல். எம். சலீம் அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.12.16 ஆந் திகதியில் இருந்து அரசாங்க தகவல் திணைக்களத்தின் தகவல் பிரதிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு II தரம் I ஐச் சேர்ந்த திரு. எஸ். பாலசுப்பிரமணியம் அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.02.01 ஆந் திகதியில் இருந்து அரசியலமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு II தரம் II ஐச் சேர்ந்த திரு. பி. சிவசங்கர் அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.09.02 ஆந் திகதியில் இருந்து தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தில் உதவி பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு II தரம் II ஐச் சேர்ந்த திரு. கும்புக்கொல்லே கெதர சுனில் நிசாந்த அவர்கள் மறு அறிவித்தல் வரை 2005.12.23 ஆந் திகதியில் இருந்து சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட உதவி சமுர்த்தி ஆணையாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு II தரம் II ஐச் சேர்ந்த திரு. கே. ஜே. விஜயசிறி அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.01.13 ஆந் திகதியில் இருந்து பிரதம அமைச்சரின் அலுவலகத்தின் உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு II தரம் II ஐச் சேர்ந்த திரு. ஜீ. வீ. எம். எஸ். பீ. உடோவிட்ட அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.01.30 ஆந் திகதியில் இருந்து அரசியலமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருமைப் பாட்டு அமைச்சின் உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு II தரம் II ஐச் சேர்ந்த செல்வி துசாரா டி பத்திரணகே அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.02.06 ஆந் திகதி முதல் பிரதம மந்திரி அலுவலகத்தில் உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு II தரம் II ஐச் சேர்ந்த திரு. பசன் சிறி சஜித் விஜேரத்ன அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.02.15 ஆந் திகதி முதல் பிரதம அமைச்சரின் அலுவலகத்தின் உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு II தரம் II ஐச் சேர்ந்த திரு. பீ. கே. பிரபாத் சந்திரகீர்த்தி அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.05.02 ஆந் திகதி முதல் பாராளுமன்றச் சபை முதல்வர் அலுவலகத்தின் உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு II தரம் II ஐச் சேர்ந்த திரு. ஆர். வீ. என். குணவர்தன அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.05.15 ஆந் திகதி முதல் தேர்தல் திணைக்களத்தின் உதவி தேர்தல் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு II தரம் II ஐச் சேர்ந்த திரு. கே. அருந்தவராஜா அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.05.16 ஆந் திகதி தேர்தல் திணைக்களத்தின் உதவித் தேர்தல் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு II தரம் II ஐச் சேர்ந்த திரு. கே. ஜீ. ஆர். விமலசூரிய அவர்கள் மறு அறிவித்தல் வரை 2006.05.18 ஆந் திகதி முதல் குடிவரவு குடியகல்வு உதவிக்கடுப்பாட்டாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

டி. திசாநாயக்க,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2006, நவெம்பர் ஆந் திகதி.
12-166

அரசாங்க அறிவித்தல்கள்

கிராமப் பெயர்களை மாற்றல்

கீழே தரப்பட்டுள்ள முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்படும் கிராமப் பெயர், இரண்டாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு மாற்றப்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கலாநிதி சரத் அமுனுகம,
பொது நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2006, நவெம்பர் 08.

மாவட்டம்	பிரதேச செயலாளர் பிரிவு	கிராம அலுவலர் பிரிவு	முதலாம் அட்டவணை	இரண்டாம் அட்டவணை
மாத்தளை	கலேவெல	ஈ427 வஹக்கோட்டை	வஹக்கோட்டை	வாசலகோட்டை

12-197

அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

ருஹுணு அபிவிருத்தி வங்கி - திஹகொட கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியால் வழங்கப்பட்ட கடனை அறவிட்டுக் கொள்ளும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ருஹுணு அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் சபையினால் சம்மதிக்கப்பட்டதொரு தீர்மானம்

1997 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் கீழும் ஸ்ரீ லங்கா மத்திய வங்கியினாலும் வெளியிடப்பட்ட 1998.04.24 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக் கமையவும் உருவாக்கப்பட்ட ருஹுணு அபிவிருத்தி வங்கிக்கு உரிமை சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களின் படியும், 2006.06.29 ஆந் திகதி நடாத்தப்பட்ட ருஹுணு அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் சபையின் கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது :-

"ருஹுணு அபிவிருத்தி வங்கியின் பிரசித்தி பெற்ற சட்டத்தரணியும், நொத்தாரிசுமான ஜீ. ஜீ. ஸீ. சரித நாணாயக்கார அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2002.04.19 திகதிக்குரிய இலக்கம் 5968 என்ற ஈட்டுப்பத்திரத்தின்கீழ் அறவிடவேண்டிய பணம் செலுத்துதல் யடியன, கடவெத்துவ. 'ஜயமாலி' வசிக்கும் கங்காணம் கமகே ஜயன்தாநந்த என்பவரினால் செலுத்தாது விடப்பட்டதாகவும், அவ் ஈட்டுப்பத்திரத்தின் கீழ் அறுபத்தோராயிரம் ரூபா (ரூ. 61,000) க்கான பணம் ருஹுணு அபிவிருத்தி வங்கிக்கு செலுத்தவேண்டியிருப்பதாகவும், 2005.12.22 ஆந் திகதியிலிருந்து வருடத்திற்கு 24% படி அறுபத்தோராயிரம் ரூபா (ரூ. 61,000) க்கான பணம் ஏலவிற்பனை திகதியிலிருந்து இன்னும் வட்டியும், ஏலவிற்பனை செலவும், இதர செலவுகள் போன்றவையும் சேர்த்து ஏதாவது பணம் செலுத்தியிருப்பின் அவற்றைக் குறைத்துக்கொண்டு, அவற்றை பெற்றுக்கொள்ளும் பொருட்டு மாத்தறை அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளரான ஜீ. பீ. ஆனந்த என்பவரினால் இலக்கம் 5968 என்ற ஈட்டுப்பத்திரத்தின் கீழ் ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் ஏனையவை, போன்றன பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்ய இருப்பதாக வங்கிப் பணிப்பாளர் சபை இதில் தீர்மானித்துள்ளது."

ஈடு வைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்

தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், வெல்லபடபத்துவை கடவெத்துவயில் அமைந்துள்ள கடுஇம்புல்கஹவத்த எனும் காணியின் 'ஸீ' எழுத்தைக்கொண்ட காணியை பிரித்து வேறாக்கப்பட்ட (மாத்தறை மாவட்ட நீதிமன்றத்தின் இல. ஜீ. 532 என்ற பிரிப்பு வழக்கின் இறுதி தீர்ப்பின் பிரகாரம்) 'எப்' எழுத்தைக்கொண்ட துண்டை மீண்டும் பிரித்து வேறாக்கப்பட்ட 'எப் 2' என்ற துண்டுக்கு மாத்தறை அதிகாரம்பெற்ற மானக எச். எஸ். பீ. தஹநாயக அவர்களினால் ஒருங்கு இணைக்கப்பட்ட இலக்கம் 1ஏ யும், 1997 உம், 1998.12.02 இன் வரைபடத்தின்படி எல்லையாக - வடகிழக்கு : இக்காணியின் ஆரம்ப காணி 'பீ' எழுத்தை கொண்ட பாதையும் ; தென்கிழக்கு : இக்காணியின் ஆரம்ப காணியும் 'உ' எழுத்தைக் கொண்ட தென்மேற்கும் மஹமுத்தேட்டுவயும் ; வடமேற்கு : இக்காணியின் 'எப்1' என்ற துண்டும் எல்லையாகக் கொண்ட ஒரு றூட், தசம் ஒன்று ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 00.15பே.) கொண்ட மிகப்பெரிய காணியின் அனைத்து பயிர்ச்செய்கை, பழவர்க்கங்கள், நிலம் போன்ற அனைத்தும் அடங்கலாக, கட்டிடங்களும் உட்பட்டதாகும்.

இக்காணி பீ 545/42 உம் 29/349 இன் கீழ் மாத்தறை காணிப் பதிவகத்தில் பதியப்பட்டிருக்கும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
டீ. ஜீ. விமலரத்ன,
பொது முகாமையாளர்.

ருஹுணு அபிவிருத்தி வங்கி,
தலைமை அலுவலகம்,
பம்புரண,
மாத்தறை.
12-06/1

ருஹுணு அபிவிருத்தி வங்கி - கெகனதுர கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கியால் வழங்கப்பட்ட கடனை அறவிட்டுக்கொள்ளும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ருஹுணு அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் சபையினால் சம்மதிக்கப்பட்டதொரு தீர்மானம்

1997 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் கீழும் மத்திய வங்கியின் நிதிச் சபையினால் வெளியிடப்பட்ட 1998.04.24 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய வும் உருவாக்கப்பட்ட ருஹுணு அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களின்படியும், 2006.06.29 ஆந் திகதி நடாத்தப்பட்ட ருஹுணு அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் சபையின் கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது :-

"ருஹுணு அபிவிருத்தி வங்கியின் பிரசித்தி பெற்ற சட்டத்தரணி யும், நொத்தாரிசுமான திருமதி சரோஜினி விக்கிரமசிங்க என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005.05.11 ஆந் திகதிக்குரிய இலக்கம் 3987 என்ற ஈட்டுப்பத்திரத்தின்கீழ் அறவிடவேண்டிய பணம் செலுத்துதல் இல. 40, குருந்துவத்த, தலல்ல வடக்கு, கெகனதுரயில் வசிக்கும் மஹதுரகே இநோக உபுல் குமார என்பவரினால் செலுத்தாது விடப்பட்டதாகவும், அவ் ஈட்டுப்பத்திரத்தின் கீழ் ஒரு இலட்சத்து தொண்ணூற்றேழாயிரத்து அறுநூறு ரூபா (ரூ. 1,97,600) க்கான பணம் றுஹுணு அபிவிருத்தி வங்கிக்கு செலுத்தவேண்டியிருப்பதாகவும், 2005.07.15 ஆம் திகதியிலிருந்து வருடத்திற்கு 20% படி ஒரு இலட்சத்து தொண்ணூற் றேழாயிரத்து அறுநூறு ரூபா (ரூ. 1,97,600) க்கான பணம் ஏலவிற்பனை திகதியிலிருந்து இன்னும் வட்டியும், ஏலவிற்பனை செலவும், இதர செலவுகள் போன்றவையும் சேர்த்து ஏதாவது பணம் செலுத்தியிருப்பின் அவற்றைக் குறைத்துக்கொண்டு, அவற்றை பெற்றுக்கொள்ளும் பொருட்டு மாத்தறை அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளரான ஜீ. பீ. ஆனந்த என்பவரினால் இலக்கம் 3987 என்ற ஈட்டுப்பத்திரத்தின்கீழ் ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் ஏனையவை போன்றன பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்ய இருப்பதாக வங்கிப் பணிப்பாளர் சபை இதில் தீர்மானித்துள்ளது."

ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்

தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், வெல்லபடபத்துவ யில் தலல்லயில் அமைந்துள்ள கதிரவிட குருந்துவத்த, கொடெல்லஹேன என்ற காணிக்கு அதிகாரம்பெற்ற நிலஅளவையாள ரான கே. சிரிவர்தன என்பவரினால் இலக்கம் 45ஏ/2003 உம், 2003/01/18 ஆந் திகதியின் வரைபடத்தின் பிரகாரம் பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 50 கொண்ட துண்டும் - வடக்கு : இலக்கம் 31. 32, 49 என்ற துண்டும் ; கிழக்கு : இலக்கம் 49 உம் 13 (பாதை) என்ற துண்டும், இலக்கம் 13 உம் 51 என்ற துண்டும் ; மேற்கு : இலக்கம் 51, 30 உம் 31 என்ற துண்டும் எனும் எல்லையாகக் கொண்ட பத்து தசம் இரண்டு எட்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 10.28பே.) கொண்ட மிகப்பெரிய காணியும் அதிலுள்ள அனைத்தும் பழவர்க்கங்கள், போன்ற யாவும் உட்பட. மேலும் மேலே குறிப்பிட்ட இல. 45ஏ/2003 என்ற வரைபடத்தின் துண்டு இலக்கம் 13 உம் 78 கொண்ட பாதைகளுக்கான வேறாக்கப்பட்ட துண்டுகளுக்கு பாதைக்கான உரிமையும் உண்டு. இச்சொத்துக்கள் பி 496/276 இன் கீழ் 2005.05.11 ஆந் திகதி மாத்தறை காணிப்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
டீ. ஜீ. விமலரத்ன,
பொது முகாமையாளர்.

ருஹுணு அபிவிருத்தி வங்கி,
தலைமை அலுவலகம்,
பம்புரண,
மாத்தறை.
12-06/2

இ. அ. நி. கூ. வங்கி

(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்ட)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

